Registered as a News Paper    பக்கங்கள் 04    விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம் 03    திருவள்ளுவர் ஆண்டு 2203    ஐப்பசி 20    (05 - II - 1992)    வியாழக்கிழமை    ஓசை 261

## இரண்டரை லட்சம் பேருக்கு தொழில் வாய்ப்பு இல்லை

சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகள் காரணமாக யாழ். குடாநாட்டில் மட்டும் சுமார் ஒரு லட்சத்து நாற்பத்தெட்டாயிரம் பேர் தமது தொழில்களை இழந்துள்ளனர். இவற்றைவிட சுமார் எண்பத்தெட்டாயிரம் பேர் தொழில் செய்யக்கூடிய வயதை அடைந்தும் தொழில் வாய்ப்புக்கள் எதுவும் இன்றி இருகின்றனர். எனவே தற்போது மொத்தமாக சுமார் 2,36,000 பேர் தொழில் வாய்ப்பின்றியும் வருமானம் இன்றியும் வாழ்ந்து வருகின்றனர் யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் ''தகவல் வங்கி''யில் இருந்து மேற்படி தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடிந்தது.

# அகதி முகாம்களில் படைக்கு ஆட்சேர்ப்பு

# தமிழ் இளைஞர்களை கொண்ட படையணி

## அநுராதபுர முகாமில் பயிற்சி

(வவுனியா)

இந்தியாவிலிருந்து இலங்கை திரும்பி வந்த தமிழ் அகதிகளை இராணுவத்திலும், பொலிஸிலும் சேர்த்துக்கொள்ளும் முயற்சியில் சிறிலங்கா அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. வவுனியாவில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலுள்ள வேப்பம்குளம், ஆசிகுளம், தாண்டிக்குளம் முகாம்களிலிருந்தே ஆட் சேர்ப்பு இடம் பெறுவதாக நம்பகரமான வட்டாரங்களில் இருந்து தெரிய வருகின்றது.

அகதி முகாம்களில் திரட்டப்படும் இவ் இளைஞர்களைக் கொண்டு புதிய படையணி ஒன்றை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டு சிறிலங்கா அரசாங்கம் இவர்களுக்கு அனுராதபுரத்தில் பயிற்சி அளித்து வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வவுனியாவில் இராணுவ கட்டுப்பாட்டில் உள்ள வேப்பம்குளம் ஆசிகுளம், தாண்டிக்குளம் ஆகிய இடங்களில் இந்தியாவிலிருந்து திரும்பி வந்த அகதிமக்கள் தங்கவைக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த அகதிமக்களில் நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள் இராணுவத்திலும், பொலிஸிலும் இணைக்கப்பட்டுள்ளனர்.

'கொப்பேகடுவ ரெஜிமன்ட்' என்ற பெயரில் தனித்தமிழ் இளைஞர்களைக் கொண்ட இராணுவம் தற்போது வவுனியாவில் சேவைக்கு விடப்பட்டுள்ளது. இவர்களுக்கு வித்தியாசமான சீருடை வழங்கப்பட்டுள்ளது.

இதேபோல பொலிஸிலும் நூற்றுக்கு மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கும் தனிப் பயிற்சிகள் அநுராதபுரத்தில் இடம்பெற்றது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

தற்போது வேப்பம்குளம் அகதி முகாமிலிருந்து இராணுவத்தில் இணைக்கப்பட்ட இளைஞர்களுக்கான பயிற்சி நடைபெறுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சிறிலங்கா இராணுவத்தில் தப்பியோடும், கொல்லப்படும் இராணுவத்தின் தொகையை ஈடுசெய்யவே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

மேற்படி பிரிவில் இணைக்கப்பட்டுள்ள இளைஞர்களின் குடும்பங்களுக்கு மேலதிகநிவாரணக் கொடுப்பனவுகளும், சலுகைகளும் வழங்கப்படுவதாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தகவல்களைப் பாதுகாப்பதில் இராணுவ மற்றும் அரசாங்க மேலிடம் மிகதீவிரமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

திருக்கோணமலையில் தங்க வைக்கப்பட்டுள்ள தமிழ்அகதிகளிடமிருந்தும்மேற்படி படை பிரிவிற்கு ஆட்சேர்ப்பு நடப்பதாக இன்னொரு தகவல்தெரிவிக்கின்றது. (தி)

## அமெரிக்க ஜனாதிபதி தேர்தல்
## பில்கிளிங்டன் அமோக வெற்றி

கெடுபிடி யுத்தத்தின் இறுதியிலும், அடுத்த நூற்றாண்டின் ஆரம்பத்திலும் சவால்களை எதிர் நோக்குவதற்கு இந்த தேர்தல் முடிவு அமெரிக்காவுக்கு எழுச்சியூட்டும் அறைகூவலாகும் என்று அமெரிக்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள பில் கிளிங்டன தனது வெற்றியையிட்டு அமெரிக்க மக்களுக்கு ஆற்றிய உரையில் தெரிவித்துள்ளார்.

ஜனநாயகக் கட்சி வேட்பாளராக பில் கிளிங்டன் போட்டியிட்டு அமோக வெற்றியீட்டியுள்ளார். பதிவான மொத்த வாக்குகளில் 87 சத விகிதம் வாக்குகள் எண்ணி முடிக்கப்பட்ட நிலையில் கிளிங்டனுக்கு மொத்த வாக்குகளில் 43 சத விகிதமும், 349 வாக்காளர் பிரதிநிதி வாக்குகளும்கிடைத்திருந்தன.

29 மாநிலங்களிலும்கொலம்பியா மாநிலத்திலும் கிளிங்டனுக்கு வெற்றி கிடைத்துள்ளது பதவியிலிருந்து இறங்கப் போகும் ஜோர்ஜ் புஸ்சுக்கு 38



சத விகிதம் வாக்குகள் தான் கிடைத்தன. அவர் 133 வாக்காளர் பிரதிநிதி வாக்குகளுடன் 15 மாநிலங்களில்வெற்றி பெற முடிந்தது.

சுயேட்சையாகப் போட்டியிட்ட கோடீஸ்வரன் றோஸ் பெரோஸ் 19 சதவிகித வாக்குகளைப் பெற்று மூன்றாவது இடத்தில் இருக்கிறார் அவருக்கு எந்த ஒரு மாநிலத்திலும் வாக்காளர் பிரதிநிதி வாக்குக் கிடைக்கவில்லை.

அமெரிக்காவின் 42-வது ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கிளிங்டனுக்கு பல உலகத்தலைவர்கள் பாராட்டுத் தெரிவிப்பதில் முந்திக் கொண்டனர்.

அர்க்கன்சாஸ் மாநிலத்தில் ஆளுநராகஇருந்த 46வயதான கிளிங்டன் தேர்ந்தெடுக்கப்பட்டதன் மூலம்குடியரசுக் கட்சியின் 12 வருட கால ஆட்சி முடிவுக்கு வந்துள்ளது.

யோன்எவ்கொனடிக்கு(வயது 43) அடுத்த படியாக இளம் வயது அதிபர் என்று பெருமை பெறும் பில்கிளிங்டன் இரண்டாவது உலகப் போருக்குப் பின்பிறந்தமுதலாவது ஜனாதிபதியாகிறார்.

ஒவ்வொரு அமெரிக்க மாநிலங்களும் தேர்தல் மன்றவாக்

## புஷ் போகிறார்
## ... இருக்கிறார்

## அரந்தலாவை அதிரடித் தாக்குதலில்
# 20 நவீன ஆயுதங்களை புலிகள் கைப்பற்றினர்

# புஷ் போகிறார் சதாம் இருக்கிறார்

(பாக்தாத்)

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் பிரசாரங்களின் போது ஜோர்ஜ் புஷ் - கிளின்டன் தரப்பினர் பல பிரசுரங்களை வெளியிட்டனர். ''புஷ் போகிறார், சதாம் ஹுசையின் இருக்கிறார்'' என்ற வாசகங்கள் அடங்கிய அழகிய ''ஸ்டிக்கர்களும்'' வழங்கப்பட்டன. அரசியல் விதண்டாவாதம், திரிபுள்ள கருத்துகள் அடங்கிய பல பிரசுரங்கள் தேர்தல் களத்தில் நின்ற மூன்று வேட்பாளர் தரப்பினாலும் வெளியிடப்பட்டன. ஆனால் ''புஷ் போகிறார் சதாம் ஹுசையின் இருக்கிறார்' என்ற ஸ்டிககர்கள் காத்திரமான ஒரு கருத்துருவாக்கத்தை அமெரிக்காவில் உருவாக்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது. மேலும் இந்த ஸ்டிக்கர் வாசகங்கள் இன்று ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மையாகிவிட்டன.

டாவது உலகப் போருக்குப் பின்பிறந்தமுதலாவது ஜனாதிபதியாகிறார்.

ஒவ்வொரு அமெரிக்க மாநிலங்களும் தேர்தல் மன்றவாக்காளர்கள் (ELECTORAL COLLEGE) அல்லது வாக்காளர் பிரதிநிதிகளைத் தெரிவு செய்துள்ளார்கள். தேர்தல் மன்றம் அடுத்த மாதம் 2 ஆம் திகதி தத்தமது ஜனாதிபதி

(3 ஆம் பக்கம் பார்க்க)

பட்டுள்ளது.

இதேபோல பொலிஸிலும் நூற்றுக்கு மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களும் தனிப் பிரிவாகவே செயற்படுகின்றனர்.

இந்த இராணுவத்திலும், பொலிஸிலும் திருமணமான வாலிபர்களும் இணைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான

## ஈராக் மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம்

(பாக்தாத்)

ஜோர்ஜ் புஷ்ஷின் தோல்வியை ஈராக் தலைநகர் பாக்தாத்தில் மக்கள் ஆடிப்பாடிக் கொண்டாடினார்கள். மோட்டார் வாகனங்கள் ஒலியை எழுப்பின. ஜோர்ஜ் புஷ்ஷின் தோல்வியை ஒலிபரப்பிய ஈராக்கிய வானொலி ஜோர்ஜ் புஷ்ஷைக் 'கிரிமினல புஷ்' என்று வர்ணித்தது. புஷ்ஷின் தோல்வியை மிக மகிழ்ச்சிகரமாக வெளியிட்ட வானொலி ஈராக் ஜனாதிபதி புகழ்பாடும் பாடல்களை ஒலிபரப்பியது. புஷ்ஷின்தோல்வியைக்கொண்டாடும் வகையில் பாக்தாத்தில் மக்கள் தமக்கிடையில் சொக்லேற்றும், தின்பண்டங்களும் பரிமாறிக்கொண்டனர்

இதேவேளை புஷ்ஷின் தோல்வியுடன் ஈராக் மீதான பொருளாதாரத்தடையும் நீக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

# புலிகள் கைப்பற்றினர்

அம்பாறை வொறப்பனை விமானப்படை முகாமிலிருந்து அரந்தலாவை இராணுவ முகாம் நோக்கிச் சென்று கொண்டிருந்த ரோந்துப்படையினர்மீது நேற்று முன்தினம் காலை 7-40 மணியளவில் விடுதலைப்புலிகள் நடாத்திய திடீர்த்தாக்குதலில் இருபது நவீனரக துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டன.

இவ்ரோந்து படையணியில் விமானப்படையினர் பொலிசார் ராணுவம் உட்பட35 இற்கு மேற்பட்ட படையினர் சென்று கொண்டிருந்தனர். இப்படையணி மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதல் சுமார் 20 நிமிடங்கள் இடம்பெற்றது இத்தாக்குதலில் 13 விமானப் படையினரும், 10 பொலிசாரும், இரண்டு இராணுவத்தினரும் கொல்லப்பட்டதாக சிறிலங்கா படை வட்டாரங்கள் அறிவித்திருந்தமை தெரிந்ததே.

இதேவேளை இப்படையணியினருக்கு உதவியாக இரு முகாம்களிலிருந்தும் வந்த இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகளின் மற்றும் ஒரு அணியினர் தாக்குதலை மேற்கொண்டனர். இத்தாக்குதலில் இராணுவ தரப்பில் ஏற்பட்ட சேதவிபரம் தெரியவரவில்லை

அத்துடன் தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட போது படையினருக்கு உதவியாக உலங்கு வானூர்தி ஒன்றும் தாக்குதலை நடாத்தியது.

இத் தாக்குதல்களின் போது மூன்று விடுதலைப் புலிப் போராளிகள் வீரச்சாவு அடைந்தனர்.

கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் விபரம் வருமாறு:-

| | | |
|---|---|---|
| ★ ஜி 3 ஏ 3 புஸ்பட் ரகதுப்பாக்கிகள் | — | 02 |
| ★ ரி-81-1 ரக துப்பாக்கிகள் | — | 08 |
| ★ ரி-56-1 ரக துப்பாக்கிகள் | — | 05 |
| ★ ரி-56-2 ரக துப்பாக்கிகள் | — | 01 |
| ★ எஸ்-84- ரக துப்பாக்கிகள் | — | 04 |
| ★ ரி-81 மகசின் | — | 40 |
| ★ ரி-56 மகசின் | — | 22 |
| ★ எஸ் 84 மகசின் | — | 06 |
| ★ ஜி-3 மகசின் | — | 10 |
| ★ ஜே ஆர் கைக்குண்டு | — | 03 |
| ★ நடுத்தர ரவைகள் | — | 1395 |
| ★ 5 56 ரவைகள் | — | 215 |
| ★ நேட்டோ ரவைகள் | — | 180 |
| ★ பராலைட் | — | 02 |
| ★ ரி-81 ரைபில் கிரனைட் | — | 01 |
| ★ ஏ.கே. கோல்சர் | — | 16 |
| ★ ஜக்கட் கோல்சர் | — | 01 |
| ★ ஜி-3 கோல்சர் | — | 02 |
| ★ தலைக் கவசம் | — | 08 |
| ★ கிட்பாக் | — | 02 |
| ★ றெயின்கோட் | — | 03 |
| ★ சப்பாத்து (சோடி) | — | 05 |
| ★ இராணுவப்பட்டி | — | 02 |

# பருத்தித்துறைக் கடற்பரப்பில் மீனவர் மீது கடற்படை தாக்கு

### ஒருவர் காயம்; எஞ்சின்கள் கடலில் வீசப்பட்டன

(வடமராட்சி)

பருத்தித்துறைக் கடற்பகுதியில் கடற்படையினர், மீனவர்கள் மீது நடாத்திய தாக்குதலில் ஒரு மீனவர் படுகாயமடைந்தார். ஐம்பதினாயிரம் ரூபாவுக்கு மேல பெறுமதியான இரண்டு எஞ்சின்கள் கடலில் தூக்கி வீசப்பட்டுசேதமாகின.

இச்சம்பவம் நேற்று பகல் 12.30 மணியளவில் முனைப் பகுதியில் நடைபெற்றது.

இரண்டுவள்ளங்களில்சென்று மீன் பிடித்துக் கொண்டிருந்த ஆறு மீனவர்களை கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகத்தின் மத்தியில் துரத்திப் பிடித்து தாக்கியதில் பருத்தித்துறையைச் சேர்ந்த திரு. ச. ரவீந்திரன் (வயது 28) படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

மற்றும்திரு. ஆ. சின்னவன், திரு. இ. சொக்கன், திரு. செல்வமோகன், திரு சா. வின்சலாஸ், திரு மு பார்த்தீபன் ஆகியோர் தாக்குதலுக்கு இலக்கானார்கள்.

இவர்களைப் பிடித்த கடற்படையினர் பலமாகத் தாக்கிவிட்டு இரண்டு வள்ளங்களிலுமுள்ள இரண்டு எஞ்சின்களையும் கடலில் தூக்கி வீசிவிட்டனர். கடலில் செய்வதறியாத நிலையில் இருந்த மீனவர்களை உறவினர்கள் வள்ளங்களில் சென்று மீட்டு வந்தனர்.

## யாழ். ஆயர் பதவியேற்பு இன்று சிறப்பு நிகழ்ச்சிகள்

(குருநகர்)

புதிய யாழ். ஆயர் கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் பதவியேற்பு சிறப்பு நிகழ்ச்சிகள், இன்று சம்பிரதாய பூர்வமாக பேராலயத்தில் நடைபெறும்.

மாலை 4 மணிக்கு புதிய ஆயர் ஏனையகுருமார்களுடன் இணைந்து ஒப்படைக்கும் திருப்பலி ஆரம்பமாகும்.

திருப்பலியை அடுத்து வெளியரங்கில் வரவேற்பு வைபவம் நடைபெறும்.

முதலில் வரவேற்பு நடனம், அசனை அடுத்து முன்னாள் ஆயர் மேதகு வண தியோகுப்பிள்ளை ஆண்டகையின் ஆசியுரை, குருக்கள் பிரதிநிதி வண. அன்ரன் இராசநாயகம், ஆண்துறவிகள் சாரிபில் பெண்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## எந்த அரசியற் கட்சியாலும் யுத்தத்தை முடிக்கமுடியாது

– கோட்டை விகார திபதி

இன்று வடக்கு - கிழக்கில் நடைபெறும் யுத்தத்தை இந் நாட்டிலுள்ள எந்தக் கட்சியாலும் முடிவுக்கு கொண்டு வர முடியாது என கோட்டை நாக விகாராதிபதி மதுலுவாவே சோபிததேரோ கருத்து தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்; இந்த யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர நாட்டிலுள்ள சகல புத்திஜீவிகளும், கலைஞர்களும், தலைவர்களும் ஒன்று திரண்டு நாட்டை மீட்பதற்கு முன்வர வேண்டும் என அழைப்பு விடுத்துள்ளார்.

## இம்மாதநடுப்பகுதியில் சர்வமத குழுவினர் யாழ்ப்பாணம் விஜயம்

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் இருந்து சர்வ மதக் குழு ஒன்று அடுத்த வாரம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்ய உள்ளது,

இம்மாதம் நடுப்பகுதியில் இக்குழுவினர் யாழ்ப்பாணம் வந்துசேருவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனை

(3 ஆம் பக்கம் பார்க்க)

## மூன்று போராளிகள் வீரச்சாவு

அம்பாறை மாவட்டம் வொறப்பனை விமானப்படை முகாமிலிருந்து புறப்பட்டு நேற்று முன்தினம் காலை ரோந்துசென்ற சிறிலங்கா படையினர் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய அதிரடித் தாக்குதலின் போது மூன்று போராளிகள் வீரச்சாவு அடைந்தனர்.

கப்டன் சந்திரராஜன் (றேகன் -சண்முகநாதன் பாஸ்கரன். அக்கரைப்பற்று, அம்பாறை), லெப்டினன்ட் சங்கரநாதன் (குயிலி - இராமசாமி செல்வம், சந்திவெளி, மட்டக்களப்பு,) வீரவேங்கை குழந்தைவேல் 'உதயன் - வீரக்குட்டி சந்திரசேகரம், இலுப்படிச்சேனை, மட்டக்களப்பு) ஆகியோரே வீரச்சாவைத் தழுவிக் கொண்டவர்களாவர்.

இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

## பெருமளவில்முஸ்லிம்களை ராணுவத்தில் சேர்க்க வேண்டும்

– சிறிலங்கா மக்கள் காங்கிரஸ்

இராணுவத்தில் முஸ்லிம்களை அதிகமாக இணைத்துக் கொள்வதன் மூலம் தனி முஸ்லிம் இராணுவக் கோரிக்கை எழும்பமாட்டாது. எனவே

(3 ஆம் பக்கம் பார்க்க)

**காரு வளரக் குளம் பெருகும் குளம் பெருகக்களனிஓங்கும்**

# வெள்ளிவிழா சிறப்புமலர்

## மக்கள் சேவையில் 25 ஆண்டுகளை நிறைவு செய்யும்

# வல்வெட்டித்துறை கணபதி படிப்பகம்

இற்றைக்கு இருபத்தொன்பது வருடங்களின் முன்னே அக்காலப் பகுதியில் வாசனைத் திரவியங்களை ஏற்றி அனுப்புகின்ற துறைமுகமாய் விளங்கி வந்த கொத்தியால் துறையில் வேலை புரிகின்ற தொழிலாளர்களினால், அவர்களது காரியாலயம் போல் பாவிக்கப்பட்டு வந்த வேம்படியில்பிரதான வீதியை ஒட்டிய ஒரு சடை போன்ற அமைப்பில் அத் தொழிலாளர்களின்செலவிலேயே அன்றைய நேரத்திலே வெளிவந்துகொண்டிருந்த பத்திரிகை, சஞ்சிகைகளைப் போட்டு 'வேம்படி வாசிகசாலை' எனும் பெயரில் சிறியளவில் ஒரு படிப்பகம் இயங்கி வந்தது.

அப் படிப்பகத்துக்கு கட்டிட வாடகையும் கொடுக்கப்பட்டு வந்து கொண்டிருந்தது இந்நிலையில் புதிய கட்டிடத்தில் படிப்பகம் அமைய வேண்டிய அவசியம் ஏற்பட்டதால்; கொத்தியால் யூனியன் தொழிலாளர்களின் அருமையான பங்களிப்போடு, அவர்களது படிப்பகத்திற்கான சிரமதான தூக்குக் கூலி வேலைகளினால் கிடைத்த பண வசூலின் மூலமும்; 'கலைவாணி' நாடக மன்றத்தினரால் மேடையேற்றப்பட்ட 'தீர்ப்புக்கு முன்' நாடகத்தினால் வசூலாயநிதியையும் மற்றும் சில உள்ளூர் உபகாரிகளினதும் பெருந்தகைகளிடமிருந்து கிடைத்த நிதியினையும் கொண்டு கட்டிட மேத்திரியாரின் கடின உழைப்புடனும் சக தோழர்களின் சிரமதானப்பணி மற்றும் பொதுமக்கள், 'ஹெலியன்ஸ்' நண்பர்களின் உதவிகளுடனும் இன்றைய படிப்பகம் தோற்றம் கொண்டது.

இதில். இப்படிப்பகம் அமைவதற்கான காரணியை நெடிய காட்டு திருச்சிற்றம்பலப் பிள்ளையார் கோவில் பரிபாலன சபையினர் மனமுவந்து அளித்தமையும் குறிப்பிடத்தக்கது.

இப்படியாக பூர்த்தி செய்யப்பட்ட பின் 14. 09. 67 அன்று கணபதி படிப்பகம் அன்றைய வல்வை பட்டின சபைத் தலைவர் திரு. மு. வி இரத்தினவடிவேல் அவர்களினால் சம்பிரதாய பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

இதன்பின் சமூகப் பெருமக்களுக்கு கணபதி படிப்பகம் ஆற்றிய சேவைகள் அளப்பரிய. அதைச் சொல்லப் புகுவோமெனில் முதற்கண் படிப்பகம் ஆரம்பமான காலமுதல் இன்றுவரையிலும் புத்தகங்கள் இரவல் கொடுக்கும் பகுதியையும் ஆரம்பித்து நடாத்தி வருகிறது. அவற்றுள் பல்வகையான புத்தகங்களுடன் தற்போது கல்விசம்பந்தமான நூல்களும் இணைந்துள்ளமை மகிழ்வுடன் கூறக் கூடியது. மேலும், இன்று படிப்பகத்தின் பின்னே அமைந்துள்ள மகளிர் பாடசாலையின் பெயர் 'வல்வை மகளிர் வித்தியாலயம்' என்று அமைவதற்கு மூலகாரணமாய் கணபதி படிப்பகம் இருந்தமைகுறிப்பிடத்தக்கது.

அதனைத் தொடர்ந்து நெருக்கிவிட்ட மக்கள் தொகையின் இயல்புக்கேற்ப ஒரே சங்கக்கடையில் குவிந்து நின்று, மூச்சு வாங்கி சாமான்களைப் பெறுவதற்கு அல்லலுறும் இப் பகுதி மக்களின் நலன் கருதி பரு. ப. நோ. கூ. சங்கத்துடன் தொடர்புகொண்டு நெடிய காட்டில் 13B என்னும் சங்கக் கிளையொன்றை திறந்து வைத்த பெருமையும் கணபதி படிப்பகத்தையே சாரும்.

இதன்பின் 1972-ம் ஆண்டு தைப்பூச நன்னாளில் வல்வைப் பாலர்களின் ஆரம்பக் கல்வியை அழகுற போதிக்க வேண்டும் என்ற நோக்கில் கணபதி படிப்பகத்தின் மற்றுமொரு பிரிவாக 'கணபதி பாலர் பாடசாலை' தோற்றங்கொண்டது.

மூன்று இரவல் கட்டடங்களில் மாறி, மாறி வாசம் செய்த கணபதி பாலர் பாடசாலை 1981-ம் ஆண்டு முதல் தனக்கென ஒரு நீண்ட அழகான கட்டடத்தில் அழகுற நிமிர்ந்து நிற்கின்றது. இதன் அமைவிற்கு அப்போதைய பாராளுமன்ற உறுப்பினரான திரு த இராசலிங்கம் அவர்கள் ஒதுக்கித்தந்த பதினைந்தாயிரம் ரூபா நிதியும்; பொது மக்களிடமிருந்து பெற்ற பண வசூலும் சிறப்பான காரணங்களாகின்றன.

இப்பாடசாலை மூலம் கல்விக் கடலில் காலடி வைத்த பிஞ்சுகள் பல, இன்று வாலிபப் பருவத்தில் பல நல்ல துறைகளில் கல்வி கற்று வருவதையும்; எதிர்கால வைத்தியர்களாக, பொறியியலாளர்

கள் என்பனவும் வருடாந்தம் நடாத்தப்பட்டும் வருகின்றன' இவற்றிற்கும், படிப்பகத்தின் ஏனைய பொது வேலைத் திட்டங்களிலும் தோள்கொடுத்து உதவி அவற்றினை ஒப்பேற்றி வைக்கின்ற 'வட இலங்கை புகழ்' கணபதி மின் அமைப்பாளர்களும்; படிப்பகத்தின் மீதும், பாலர் பாடசாலைமீதும் மாறாத நல்லபிமானமுள்ள நெடியகாட்டு இளைஞர்களும் சிறப்பாகக் குறிப்பிடத்தகுந்தவர்கள்.

கையெழுத்துச் சஞ்சிகையும் 1985-ம் ஆண்டின் பிற்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டு நடாத்தப்பட்டு வருகின்றது.


இச்சமயத்தில் அவ்வப்போது இராணுவ நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்டு வந்த மக்களுக்கு இயன்றளவில் பொது மக்களிடமிருந்து உணவு, உடை போன்றவைகளை சேகரித்து உதவியமையும் குறிப்பிடத்தக்கது.

மற்றும் இலங்கை - இந்திய இராணுவங்களினால்சீர்குலை

யையும், இனிவரும் காலத்தில் இதுபோன்ற இயல், இசை, நடன வகுப்புக்களின் தோற்றத்திலும் ஆர்வங் கொண்டுள்ள இன்றைய செயற்குழுவினரின் முயற்சி பலிதமாகும் நாளில் எம்மக்கள் கணபதி படிப்பகத்தின் பரிபூரண ஒரு சேவையை காணுவார்கள். அப்போது பெருநிறைவும் அடைவார்கள் என்பது திண்ணம்.

இவைகளோடு, இதுவரை காலமும் படிப்பகத்தின்சேவைகளில் பங்கேற்ற நிர்வாகிகள், அபிமானிகளில் பலர் இன்று மாவீரர்களாகவும்; இயற்கையெய்தியுமுள்ளனர் அவர்களை இன்று நன்றியுடன் நினைவு கூருகின்றோம்.

- நினைவு -
- செயற்குழு
கணபதி படிப்பகம்.



தற்கால சூழ்நிலைக்கு முன்பாகவே இற்றைக்கு பதினைந்து வருடங்களின் முன் சென். ஜோன்ஸ் முதலுதவிப் பயிற்சி வகுப்பொன்றையும் நடாத்தி சான்றிதழ்களை வழங்கியுள்ளமை சிறப்பானது.

இது மட்டுமல்லாது எமது பகுதிவாழ் மகளிரின் கைத்திறனை வளர்க்கும் பொருட்டு தையற்பயிற்சி வகுப்பொன்றையும் 1983-ம் ஆண்டு முதல் ஆரம்பித்து தொடர்ந்து நடாத்தி வருகின்றது. அத்தோடு இதன் இவ்வளவு வருடகால சேவையில் காலத்திற்கேற்றாற்போல அழகியற் கலை வகுப்புக்கள் போன்றவைகளை நடாத்தியதோடு, 'கம்பியூட்டர் பயிற்சி வகு

க்கப்பட்ட கணபதி படிப்பகம் மீண்டும் புதுப்பொலிவுடன் நிமிர்ந்து நின்று தன் வழமையான சேவைகளை தொடர்வது அறியத்தக்கது.

இவைகள் மட்டுமல்லாது அக்கால முதல் வல்வையில் இயல் இசை, நாடகத்துறைகளில் சிறந்து விளங்கிய மேதைகளை சிறப்புடன் வரவேற்று இயல்துறையில் திரு. பூ க முத்துக்குமாரசாமி அவர்களையும்; இசைத்துறையில் திரு ஏ. நடராசா அவர்களையும்; நாடகத்துறையில் திரு: சா. மருசலீன்பிள்ளை (செல்வராசா) அவர்களையும் முறையே 'மா அறிஞர்', 'சங்கீத மாமணி', 'நாடக மாமணி' என 1986-ம் ஆண்டு

## ஆசிச் செய்திகள்

இம்மாவட்டத்தில் இயங்கி வருகின்ற அரச சார்பற்ற கிராமிய நிறுவனங்களுள் சனசமூக நிலையங்களும், படிப்பகங்களும் மிக முக்கிய இடத்தைப் பெறுகின்றன. ஒரு கிராமத்தினுடைய தனித்துவமே பல்வேறு வெளித் தாக்கங்களுக்கு ஆளாகாமல் பரம்பரை பரம்பரையாகப் பேணப்பட்டு வரும் சமுதாய விழுமியங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து ஒற்றுமையாக வாழ்வதாகும். நகரப் பகுதிகளிலே காணப்படாத பல்வேறு சிறப்பம்சங்களை இக்கிராம வாழ்க்கையில் நாம் காணலாம். இக்கிராமங்கள் தமது பாரம்பரியத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து வருகின்றன.

இவ்வாறான கிராமங்களில் வாழும் மக்கள் அக்கிராமங்களினுடைய சமூக தேவைகளைத் தம்மட்டத்தில், தமது சக்திக்கு உட்பட்ட விதத்தில் பூர்த்தி செய்வதற்காகப் பல்வேறு அமைப்புக்களினூடாக ஒன்றுபடுகின்றன இந்த அமைப்புக்களின் அங்கத்தவர்கள் தமது கிராமங்களின் தேவைகளை இனங்கண்டு அவற்றை நிவர்த்திப்பதில் ஈடுபட்டு வருகின்றன. மாறிவருகின்ற மக்களுடைய தேவைக்கு ஏற்ப இவற்றின் செயற்பாடுகளும் மாற்றமடைந்து வருகின்றன.

இவ்வகையாக இயங்கும் இம்மாவட்ட கிராம நிறுவனங்களுள் வல்வெட்டித்துறையில் அமைந்திருக்கின்ற கணபதி படிப்பகமும் ஒன்றாகும். வல்வெட்டித்துறை மக்கள் வீரத்திற்கும் ஒற்றுமைக்கும் எடுத்துக்காட்டாக விளங்குபவர்கள். அவ்வகையான மக்களின் சூழலில் இயங்கிவருகின்ற கணபதி படிப்பகத்தைச் சேர்ந்தோர் கடந்த 25 வருடங்களாகப் பல்வேறு சமூகநலத் திட்டங்களை நிறைவேற்றி வருகின்றனர். பாலர் பாடசாலை ஒன்றினைக் கடந்த 20 வருடங்களாக நடாத்தி ''கவிஞன்'' என்னும் கையெழுத்துச் சஞ்சிகை ஒன்றினை வெளியிட்டு வருகின்றனர். நடன வகுப்புகளை

### திறப்புவிழாவின் போது

### கணபதி படிப்பக செயற்குழுவினர்

தலைவர்:
திரு வே. ஆதிஅருணாசலம்
உபதலைவர்:
திரு. செ. பேரின்பராஜா
செயலாளர்:
திரு தெ. லெட்சுமிகாந்தன்
உபசெயலாளர்:
திரு. பூ. அகமணிதேவர்
பொருளாளர்:
திரு. வே. பாலசுப்பிரமணியம்

செயற்குழு உறுப்பினர்கள்:
01. திரு. சே ஏகாம்பரம்
02 திரு. வே. கதிர்காமலிங்கம்
03. திரு எஸ் இராமசாமி
04 திரு. செ. கணேசமூர்த்தி
05. திரு. ஆர். பத்மநாதன்

போசகர்கள்:
திரு. M V. இரத்தினவடிவேல் (பட்டினசபை தலைவர்)
திரு K துரைரெத்தினம் (பாராளுமன்ற உறுப்பினர்)
திரு. K இராசவேல் (பட்டினசபை உறுப்பினர்)

திறப்புவிழாவின்போது படிப்பக கட்டிட வரவு - செலவு அறிக்கையை வெளியிட்டோர்:
தெ லெட்சுமிகாந்தன்
வே. கதிர்காமலிங்கம்
கி. சந்திரசிவா
வே. ஆதிஅருணாசலம்
வே. சுந்தரேஸ்வரன்
வே. பாலசுப்பிரமணியம்

### வெள்ளிவிழா ஆண்டு செயற்குழுவினர்

தலைவர்:
திரு: க. ந. தேவதாஸ்
உபதலைவர்:
திருமதி: ப. இலங்கேஸ்வரி
செயலாளர்:
செல்வன்: கா. வசந்தன்
உபசெயலாளர்:
செல்வன்: ச ஜெயகணேஸ்
பொருளாளர்:
திரு: இ ராதாகிருஷ்ணன்

செயற்குழு உறுப்பினர்கள்:
01 திரு: இ தேவகுரு
02 திரு: நா. நகுலேஸ்வரன்
03 திரு: வ செல்வவினாயகம்
04 செல்வன்: ச. சூரியகுமார்
05 செல்வன்: க. ஞானச்சந்திரன்
06. செல்வன்: வே. பிறேம்குமார்

போசகர்கள்:
திரு: த. பிருதிவிராஜ்
திரு: தெ. இலட்சுமிகாந்தன்
திரு: சி துரைசிங்கம்

கணக்காய்வாளர்:
திரு: க. திருநாவுக்கரசு

## ஆசிச் செய்தி

வல்வை நெடியகாட்டுத் திருச்சிற்றம்பலம் பிள்ளையார் கோவில் வடக்கு வீதியில் இயங்கிவரும் கணபதி படிப்பகம் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக வல்வை மக்களின் அறிவு வளர்ச்சிக்குப் பெரும் சேவையாற்றி வந்துள்ளது இங்கு தருவிக்கப்படும் செய்தித்தாள்கள், சஞ்சிகைகள், அரும்பெரும் நூல்கள் என்பனவற்றைப் படித்து மக்கள் பெரும் பயனடைந்து வருகின்றனர் அத்துடன் இப்படிப்பகத்தின் ஓர் அங்கமாக இயங்கிவரும் பாலர் பாடசாலையினால் சிறு குழந்தைகள் தம பள்ளிப்படிப்பை சிரமமின்றி தொடங்குவதற்கு ஏற்ற வகையில் இலகுவான முறையில் பயிற்சியளிக்கப்படுகின்றனர்.

இவற்றைத் திறம்பட நடத்திவரும் கணபதிபடிப்பகத்தின் நிர்வாகிகளை நாம் பெரிதும் பாராட்டுகின்றோம். இம்மாதம் 6-ம் 7-ம், திகதிகளில் கணபதிபடிப்பகத்தின் வெள்ளிவிழாக் கொண்டாட்டங்கள் மிகச்சிறப்பாக நடைபெறவிருக்கின்றன. இவ்வேளையில் கணபதிபடிப்பகமும் பாலர் பாடசாலையும் மேன்மேலும் வளர்ச்சியடை

நடாத்தி ''கவிஞன்'' என்னும் கையெழுத்துச் சஞ்சிகை ஒன்றினை வெளியிட்டு வருகின்றனர். நடன வகுப்புகளை நடாத்துவதினூடாகக் கலாசார வளர்ச்சியிலும் பேணலிலும் ஈடுபட்டுள்ளனர். தையல் வகுப்புக்களை நடாத்துவதன் ஊடாக இளம் பெண்களது வருவாயைப் பெருக்குகின்ற பொருளாதார நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். க. பொ. த. (சா/த). க. பொ. த. (உ/த) வகுப்புகளில் முதன்மைச் சித்தி அடைந்தவர்களுக்குப் பரிசில்கள் வழங்குவதன் ஊடாக அப்பகுதியினுடைய கல்வி வளர்ச்சிக்கும் உதவி வருகின்றனர். 1967-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 14-ம் திகதி ஆரம்பித்த இந்நிலையம் வெள்ளிவிழா கொண்டாடுவதை அறிந்து மனமகிழ்ச்சி அடைகின்றேன். இடர்பட்டு நிற்கும் தமிழ் மக்களுக்குக் காலத்தின் தேவை அறிந்து செயற்பட்டு வரும் இந்நிலையத்தினைப் பாராட்டுகின்றேன். நிலையத்தின் தொண்டு மேன்மேலும் வளர்ச்சி பெறுவதாக.

**சுந்தரம் டிவகலாலா**
பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

---

**வல்வெட்டித்துறை** கணபதி படிப்பகம் தனது இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடும் இத்தருணத்தில் வல்வெட்டித்துறை நகர மக்களின் சார்பில் இச்சனசமூக நிலையத்திற்கு எனது பாராட்டைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்

வல்வெட்டித்துறை நகரசபைப் பிரதேசத்தில் சிறப்பாக இயங்குகின்ற சனசமூக நிலையங்களில் கணபதி படிப்பகமும் ஒன்றாகும். இந்நிலையம் சிறார்களுடைய கல்வி வளர்ச்சிக்காகப் பாலர் பாடசாலை, பெண்களின் தொழில் வளர்ச்சிக்காகத் தையல் பயிற்சி நிலையம் என்பனவற்றை திறம்பட நடாத்தி வருவதுடன் மற்றும் மக்களின் மேம்பாட்டுக்காகக் கலை, கலாசார, சமய நிகழ்ச்சிகளையும் அவ்வப்போது நடாத்தி வருகின்றது. அத்துடன் நகரசபையின் வேலைத்திட்டங்களை நிறைவேற்றுவதற்கும் அதனால் ஆன பங்களிப்பைச் செய்கின்றது.

இந் நிலையத்தின் பணி மேன் மேலும் விருத்தியடைய வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

நகராட்சிமன்ற அலுவலகம்,
வல்வெட்டித்துறை,

ந. ஞானவேல்
செயலாளர்

வதையும்; எதிர்கால வைத்தியர்களாக, பொறியியலாளர்களாக மாறி வருவதையும் கணபதி பாலர் பாடசாலையின் தரமான சேவைக்கு ... றென்றே கூறலாம்.

அதுமட்டுமல்லாது பாலர்களின் கலைத்திறமைகளை பாரறியச் செய்யும் வகையிலான பாலர் தின விழாக்கள், பாலர் விளையாட்டுப் போட்டிகள் மற்றும் ஆண்டுவிழாக் கலை வகுப்புக்கள் போன்றவைகளை நடாத்தியதோடு, 'கம்பியூட்டர் பயிற்சி வகுப்பு,' 'ஆங்கில வகுப்பு' களுக்கும் களம் தந்து மாணவ சமூகத்திற்கு அருஞ் சேவையாற்றியுள்ளது.

அத்தோடு வல்வை இளம் எழுத்தாளர்கள் கலைஞர்களின் எழுத்துத் திறமைகளை வளர்க்கும் நோக்கில் 'கவிஞன்' எனும் பெயரில் ஒரு ... முறையே 'மா அறிஞர்', 'சங்கீத மாமணி', 'நாடக மாமணி' என 1986-ம் ஆண்டு நடைபெற்ற ஆண்டுவிழாவின் போது பட்டமளித்து பொன்னாடை போர்த்தி கௌரவித்தமையும் சிறப்பெனக் கொள்ளலாம்.

இவை தவிர படிப்பகத்தின் சமூகத்திற்கான ஏனைய சேவைகளுடன் இன்று நடன வகுப்பு ஆரம்பித்துள்ளமை ... த்தின் வெள்ளிவிழாக் கொண்டாட்டங்கள் மிகச்சிறப்பாக நடைபெறவிருக்கின்றன. இவ்வேளையில் கணபதிபடிப்பகமும் பாலர் பாடசாலையும் மேன்மேலும் வளர்ச்சியடைந்து வல்வை மக்களுக்கு பல்லாண்டு பல்லாண்டு காலம் சேவையாற்ற அருள் புரியும் வண்ணம் நெடியகாட்டுக்கணபதியை கோவில் பரிபாலனசபையின் சார்பில் வேண்டி வழிபடுகின்றோம்.

அன்பன்
**சி. நித்தியானந்தவேல்**
தலைவர்,
வல்வை நெடியகாட்டு திருச்சிற்றம்பலப் பிள்ளையார் கோவில் பரிபாலனசபை


வெள்ளிவிழாக் காணும் கணபதி படிப்பகம்
தனது சமூகசேவைகளில்
மேன்மேலும் சிறந்து விளங்க வாழ்த்துகின்றோம்.
**கணபதி மின் அமைப்பாளர்கள்**
**நெடியகாடு**
**இளைஞர் விளையாட்டுக் கழகம்**
நெடியகாடு - வல்வெட்டித்துறை

வல்வை புடைவை மாளிகை
சகலவிதமான வெளிநாட்டு, உள்நாட்டு, பிறந்த தின சிறப்பு ஆடைகளுக்கும், எமது சொந்தத் தயாரிப்பான நல்ல நவநாகரிக ஆடைகளுக்கும் உகந்ததோர் மாளிகை !
**வல்வை புடைவை மாளிகை**
நவீனசந்தைகிழக்குப்புறம். வல்வெட்டித்துறை

**ஐயப்பா ஜவுளி மாளிகை**
யாழ். வீதி, வல்வெட்டித்துறை
திருமணம் மற்றும் முகூர்த்த வைபவங்களுக்கேற்ற பட்டுப்புடைவைகள், சேட்டிங், சூட்டிங்என்பனவற்றை உங்கள் எண்ணம் போல் எண்ணற்ற ரகங்களில் தெரிவுசெய்திட இன்றே விஜயம் செய்யுங்கள்!
**AIYAPPA TEX**
JAFFNA ROAD - VALVETTITURAI

**ரேணுகா களஞ்சியம்**
**உள்ளூர் உற்பத்தி விளைபொருள் விற்பனை நிலையம்**
பிரதான வீதி, வல்வெட்டித்துறை

**லக்ஷினி துணியகம்**
164, காங்கேசன்துறைவீதி,
யாழ்ப்பாணம.
உரிமையாளர் : K. அற்புதலிங்கம்

கேக் தயாரிப்பதற்கு தேவையான சகல பொருள்களும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
**சிவரஞ்சினி ஸ்ரோர்ஸ்**
வேம்படி - வல்வெட்டித்துறை

போக்குவரத்துப் பயணிகள் தங்குவதற்கு நாடவேண்டிய இடம்
**குமரன் ரூறிஸ்ட் இன்**
67, அருச்சுனா வீதி, (ஸ்ரான்லி வீதி)
யாழ்ப்பாணம்.

படிப்பகத்தின் தொடரும் சேவைகளை வாழ்த்தும்
**ரிஷி ஆடை மாளிகை**
யாழ். வீதி, வல்வெட்டித்துறை

**பிரபு தையலகம்**
நெடியகாடு, வல்வெட்டித்துறை


## மாணவருக்கான கையேடு

''பரீட்சைகளுக்கான ஆயத்தமும் அவற்றை வெற்றிகரமாக எதிர் கொள்ளலும்' உளவியல் சஞ்சிகை தனிப் பிரதி ரூபா 12. 00 தேவையானோர் பதினைந்து ரூபா முத்திரை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். முகவரி ஜோ. எக்கட்டன் 1913, கொழும்புத் துறை வீதி. சுண்டிக்குளி மகளிர் கல்லூரி எதிர் ஒழுங்கை— சுண்டிக்குளியில் பெற்றுக் கொள்ளலாம். (சி/ 5231)

## தவறிவிட்டது

தாவடி தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்திலிருந்து கோண்டாவில் - இருபாலை வீதியூடாக கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு செல்லும் பாதையில் மூக்குக்கண்ணாடி ஒன்று தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் M. P நாதன் தாவடி தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தில ஒப்படைத்தால் சன்மானம் வழங்கப்படும். (3574)

# வரி விளம்பரம்

## பற் சிகிச்சை

பற் சிகிச்சை நிலையம் (எஸ். பி சாமி அன் கோ கட்டடம்) மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தினசரி 12 ந.ப-2 பி.ப வரை (3216)

## தேவை

ஜாம் வெற்றுப்போத்தல்கள் உடனடியாக தேவை. நியாயமான விலைக்கு பெற்றுக் கொள்ளப்படும். வேலவன் ஸ்ரோர்ஸ், நல்லூர் கோயில் முன்பாக. (3581)

## வெளிவந்துவிட்டது

''மாற்றம்'' காலாண்டு மக்கள் சஞ்சிகை, சிறு கதை, பொது அறிவு, குறுக்கெழுத்துப் போட்டி, கட்டுரைகள், சுவையான புதினங்கள் போன்றவற்றைக் கொண்டு வெளிவந்துவிட்டது ரூபா 10/- ஆண்டுச் சந்தா ரூபா 35/- பிரபல புத்தகசாலைகளில் கிடைக்கும். (3542)

## ஆடுகள் தேவை

ஒரு போத்தலுக்கு மேல் பால் எடுக்கக்கூடிய ஜமுனா பாறியின ஆடுகள் தேவை, ஐயாத்துரை அன்சன்ஸ். பத்திரிகை விற்பனை நிலையம், பஸ்நிலையம், சாவகச்சேரி. (3354)

## விற்பனைக்கு

தரமான கட்டச்சு இயந்திரம் விற்பனைக்குண்டு டில்கா வாச் வேக்ஸ் 284 ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமையில்) யாழ்ப்பாணம். (சி-5344)

நல்லூர் - நுணாவில்

## சிவ நாம பாத யாத்திரை

நிகழும் ஆங்கீரஸ வருஷம் ஐப்பசி மாதம் 21-ம்திகதி (06- 11- 92) வெள்ளிக்கிழமை காலை 7 மணியளவில் நல்லூர் ஆலய முன்றலிலிருந்து முருகன் அடியார்கள் பஜனை ஆரம்பித்து பருத்தித்துறை. செம்மணி, கண்டி வீதி வழியாக கைகடி நுணாவில் ஸ்ரீ சிவபூதவராயர் ஆலயத்தையடைந்து அங்கு விசேஷ ஆராதனைகள் நடைபெறும்.

[3579]

### சிந்தனைக்கு

நிகழ்காலத்தை நாம் கவனிப்போம் வருங் காலத்தைப் பொறுத்த வரை தருணம் வந்து வாய்க்கும் போது அதைச் சமாளிக்கும் வகையை நாம் அறிந்து கொள்வோம்.

- பியேர் கோர்னேய்ஸ்


ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்- 05-11- 1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05


## துட்டகைமுனு இறந்தான் 'கந்துல' மூழ்கியது

"இன்று எங்கள் 'சிங்கவீரம்' குறைந்து விட்டது. 'எல்லாளர்கள்' எம்மை இலகுவாகத் தாக்குகின்றார்கள். நீங்கள் 'வீர துட்டகைமுனுக்களாக' மாறவேண்டும்" இவ்வாறு ராகம 'ரணவீர செவன' எனப்படும் ஊனமுற்ற இராணுவ குடியிருப்பின் பொறுப்பதிகாரி கப்டன் நோமன் கதனபாலா விழா ஒன்றில் பேசுகையில் தெரிவித்துள்ளார்.

இதுவரை சிங்கள பௌத்த பேரினவாதிகள் சிங்கள மக்கள் மத்தியில் விடுத்து வந்த கோரிக்கையை தற்பொழுது இராணுவ அதிகாரிகளும் நேரடியாக விடுக்கத் தொடங்கியுள்ளனர். அரசியல்வாதிகளை வெகுவாகச்சாடியுள்ள இவ் இராணுவ அதிகாரி "வாய் வீச்சு அரசியல் வாதிகளின் தொகை அதிகரித்து வருகின்றது நாட்டுப்பற்றும் இனப்பற்றும் அழிந்து போகும் நிலை ஏற்பட்டு வருகின்றது. நம் இனத்தின் கழுத்து நெரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது" எனவும் தெரிவித்துள்ளார்.

இராணுவ அதிகாரியின் இப்பேச்சானது, சிங்கள பௌத்த பேரினவாதத்திற்கு இனி அரசியல் வாதிகளினால் தலைமை கொடுக்க முடியாது, இராணுவத்தினாலேயே தலைமை கொடுக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துவதாகத் தெரிகின்றது

ஆனால் சிங்கள இளைஞர்கள் ஏன் இன்று இராணுவத்தில் சேருவதற்கு அஞ்சுகின்றார்கள் என்பதையும், அரசியல்வாதிகள் ஏன் இவ் விவகாரத்தில் தோல்வியைச் சந்தித்தார்கள் என்பதையும் அவ் இராணுவப் பொறுப்பதிகாரி விளங்கிக் கொண்டதாகத் தெரியவில்லை.

எண்பதுகளின் ஆரம்பத்தில் இருந்து தொண்ணூறு ஆரம்பம் வரை எல்லாளர்களுக்கு எதிராகப் போரில் குதிக்க 'வீர துட்ட கைமுனுக்கள்' பல்லாயிரக்கணக்கில் முண்டியடித்துக் கொண்டே முன்வந்தனர். அது குறித்து அரசாங்கமும் இராணுவமும் பெருமை பேசிக்கொண்டனர். ஆனால் போரின் விளைவுகள் மகாவம்சத்தின் [illegible]

## விவசாயிகள் கடன் பத்திரங்கள் பூர்த்தி செய்ய நேரில் வருவர்

1992 காலபோக விவசாயச் செய்கைக்காக மக்கள் வங்கியினால் வழங்கப்படவிருக்கும் விவசாயக் கடன்களுக்கு ஏற்கனவே சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் மூலம் விண்ணப்பங்களை சமர்ப்பித்தவர்களின் கடன் பத்திரங்களை பூரணப்படுத்துவதற்காகவும் விவசாயக் காப்புறுதியைச் செய்வதற்காகவும், மக்கள் வங்கியின் உத்தியோகத்தர்களும். விவசாயக் காப்புறுதிச் சபை உத்தியோகத்தர்களும், கமத்தொழில் சேவை திணைக்கள உத்தியோகத்தர்களும் அப் பிரதேசத்தில் கடன் பெறவுள்ள விவசாயிகளை சந்திக்கவுள்ளனர்.

இன்று காலை 9.00 மணிக்கு கைதடி கமத்தொழில் சேவை நிலையத்திலும் 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 00 மணிக்கு மீசாலையிலுள்ள கமத்தொழில் சேவை நிலையத்திலும் 7 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 00 மணிக்கு கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்திலும் சந்திக்கவுள்ளனர்.

அப் பிரதேசங்களில் வாழ்கின்ற ஏற்கனவே கடன் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த விவசாயிகள் பின்வரும் ஆவணங்களுடன் தவறாது சமுகமளிக்குமாறு உதவித் திட்டமிடல் பணிப்பாளர் கேட்டுக்கொள்கிறார்.

1. விண்ணப்பதாரியின்தேசிய அடையாள அட்டை
2. விவசாயிகளின் அடையாள அட்டை.
3. விவசாயக் காணி பற்றிய விபரங்கள், ஆவணங்கள்.
4. பயிர்க் காப்புறுதிக்குரிய கட்டணம்.
5. விவசாயம் செய்யப்படும் காணி சொந்தமா அல்லது குத்தகையா என்பதனைப் பிரிவுப் பெரும்பாக உத்தியோகத்தரின் உதவியுடன் பிரதேச செயலாளரினால் உறுதிசெய்து கொடுக்கப்படவேண்டும்

ஆகவே குறித்த திகதியில் மேற்குறிப்பிட்ட இடங்களுக்கு வரும் மக்கள் வங்கி அலுவலர்கள் கடன் வழங்கவுள்ள விவசாயிகளைச் சந்திக்கவும் குறித்த இடத்தில் வேண்டிய தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கும் உதவிசெய்து கடனை விரைவாக வழங்குவதற்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்யுமாறு தயவாகக் கேட்டுக்கொள்கின்றார்.

## சித்த மருத்துவத்துறை தலைவர் ராஜினாமாச் செய்தார்

(யாழ்ப்பாணம்)

கைதடி சித்த மருத்துவக் கல்லூரி துறைத் தலைவர் திரு பவானி தனது பதவியை ராஜினாமாச் செய்துள்ளார்

இவர் தனது ராஜினாமாக் கடிதத்தை ஏற்கனவே பல் கலைக்கழக நிர்வாகத்திடம் சமர்ப்பித்திருக்கிறார். இந்த ராஜினாமாக் கடிதத்தை பல் கலைக்கழக மூதவை ஏற்றுக் கொண்டிருக்கிறது. இதனால் உருவாகிய பதவி வெற்றிடத்துக்கு திருமதி பவானி கடந்த முதலாம் திகதி முதல் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

## சந்திரசேகரன் வழக்கு; ஜனவரி7-ம்திகதிவிசாரணை

(கொழும்பு)

மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெரியசாமி சந்திரசேகரன் உபதலைவர் வடிவேல் தர்மலிங்கம், பொதுச் செயலாளர் பாவா அப்துல் காதர் ஆகியோருக்கு எதிரான வழக்குகள் ஜனவரி மாதம் 7-ம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

இவ்வழக்குகளைக் கொழும்புக்கு மாற்ற எடுக்கப்பட்ட முயற்சிகள் பலன் அளிக்கவில்லை என்றும் வழக்கைத் துரிதமாக முடிக்க ஜனவரி மாதத்தில் நாள் தருமாறு சட்டத்தரணி கூறியதை ஏற்றுக் கொண்ட நீதிபதி ஜனவரி 7-ம் திகதி விசாரணை ஆரம்பமாகும் என்று தெரிவித்தார்.

## ராக்கிங் வேண்டுமா? மாணவர் தீர்மானிக்கட்டும்

### மருத்துவத்துறை பீடாதிபதி

யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் க. பாலசுப்பிரமணியம் பீடாதிபதி பதவியை ராஜினாமாச் செய்வதாக பல்கலைக்கழக துணைவேந்தரிடம் சமர்ப்பித்த ராஜினாமாக்கடிதத்தை மீளப் பெறுவாரா? அல்லது அவரது ராஜினாமா ஏற்றுக் கொள்ளப்படுமா என்பதில் எதுநடக்கும் என்பது குறித்து நிச்சயமற்ற நிலை தோன்றியுள்ளது

ராக்கிங் வேண்டுமா அல்லது வேண்டாமா என்பது குறித்து பல்கலைக்கழக மாணவர்கள் இரகசிய வாக்கெடுப்பு மூலம் ஒரு தீர்மானத்துக்கு வரவேண்டும் ராக்கிங் வேண்டும் என்று தீர்மானத்தால் அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ராக்கிங் குறித்து முறைப்பாடு செய்யும் பெற்றோர்களுக்கு நான் பதவியில் இருந்து பதிலளிக்க இது உதவியாக இருக்கும். ராக்கிங் வேண்டாம் என்று தீர்மானிக்கப்பட்டால் ராக்கிங்கிற்கு எதிராக நான் எடுத்த நடவடிக்கைகள் குறித்து கண்டனம் தெரிவித்த மாணவர்கள் மன்னிப்புக் கோருமிடத்து எனது ராஜினாமாக் கடிதத்தை மீளப்பெறலாம் என்று பேராசிரியர் பாலசுப்பிரமணியம் தெரிவித்தார்.

## அம்பாறை தமிழ் அகதிகள் பிச்சை எடுத்து ஜீவனம்

(அக்கரைப்பற்று)

அக்கரைப்பற்று ஆலையடி வேம்பு திருக்கோயில் பிரதேசங்களில் நிலை கொண்டிருக்கும் அகதிகள் தற்போது பிச்சை எடுத்து ஜீவனம் நடாத்துகிறார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களுக்கு உலர் உணவாக அரிசியும் சீனியும் மட்டுமே வழங்கப்பட்டு வருகிறது

கடந்த இருவருடமாக எந்த விதமான தொழிலும் இல்லாமல் முகாமிலேயே முடங்கிக் கிடக்கும் இவர்கள் தற்போது வீடுவீடாகச் சென்று தங்கள் அவல நிலைமையைத் தெரிவித்துக் கிடைக்க கூடியதைப் பெற்று வாழ்க்கை நடாத்துவதில் ஈடுபட்டு வருகின்றனர்.

## பொலிஸ்திணைக்கள பதவிஉயர்வில் தமிழ்ப் பொலிசார் புறக்கணிப்பு

(கொழும்பு)

பொலிஸ் திணைக்களத்தினால் அண்மையில் வழங்கப்பட்ட பதவி உயர்வுகளில் தமிழ்ப் பொலிசார் புறக்கணிப்புசெய்யப்பட்டுள்ளனர். திட்டமிட்ட வகையில் இப் புறக்கணிப்பு இடம் பெற்றிருப்பதாகவும், கஷ்டப் பிரதேசங்களில் கடமையாற்றும் பொலிஸ் மற்றும் இராணுவத்தினருக்கு பதவி உயர்வுகளின் போது விசேட சலுகை காட்டப்படும் என்ற அரசின் அறிவிப்புக் கூட இவர்களைப் பொறுத்த மட்டில் அமுலாக்கப் படவில்லையென்றும் சம்பந்தப்பட்ட வட்டாரங்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அண்மையில் இருபத்தொன்பது பொலிஸ் அதிகாரிகள் இருபத்து நான்கு மணி நேரத்தினுள், பதவி உயர்வு வழங்கப்பட்டு விசேட பயிற்சி வழங்கப்பட்டு இருப்பதுதெரிந்ததே

மன்னார், ஊர்காவற்றுறை போன்ற பகுதிகளில் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய சிரேஷ்ட பொலிஸ் இன்ஸ்பெக்டரான கே.மோகனதாஸ் இது கால வரை பிரதம பொலிஸ் இன்ஸ்பெக்டர் பதவிக்குத் தானும் உயர்த்தப்படவில்லை. இதேபோல வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி றோயல் பிரான்சிஸ் என்பவரும் பதவி உயர்வில் புறக்கணிப்பு செய்யப்பட்டுள்ளார்.

## இலவசச் சீருடைகள் ஜன. 15 முன் வழங்கப்படும்

(நல்லூர்)

வடக்குக் கிழக்கு மாகாணத்திலுள்ள பாடசாலைகளுக்கான இலவச சீருடைகள் தை மாதம் 15-ம் திகதிக்கு முன்பாக வழங்கப்பட உள்ளதாக வடக்குக் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் திரு. எம். ஏ சி மொஹைதீன் சகல கோட்டங்களுக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளருக்கும் தெரிவித்துள்ளார்.

வடக்குக் கிழக்கு மாகாணத்தின் களஞ்சியத்தில் இருந்து மாவட்டத்துக்கு 15-12-92-ல் வழங்கப்பட உள்ளது. மாவட்டங்கள் மூலம் கோட்டங்களுக்கு 01-01-93-ல் வழங்கப்படும் கோட்டங்களிலிருந்து கொத்தணிக்கு 10-1-93-ல் வழங்கப்பட உள்ளது. கொத்தணியில் இருந்து இச் சீருடைகள் 15 - 01 - 93ற்கு முன்பாக பாடசாலைகளுக்கு வழங்கப்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இச் சீருடைகள் போக்குவரத்து வசதியுள்ள இடங்களில் அரச வாகனங்களிலும், வசதியற்ற இடங்களில் கப்பல்களூடாகவும்தனியார்வாகனங்களிலும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

வடமாகாணத்தில் இயங்கும் 960 பாடசாலைகளுக்கும் கிழக்கு மாகாணத்தில் இயங்கும் 846 பாடசாலைகளுக்கும் இச் சீருடைகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இவர் இக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## 21 ஆம்திகதி எழுதுவினைஞர் பதவி உயர்வு பரீட்சை

(யாழ்ப்பாணம்)

மேற்படி பரீட்சை யாழ். [illegible]

## விவசாயபாட விதானத்தில் புதிய தொழில்நுட்ப பாடம்

[illegible]

## பழுதடைந்த உணவுப் பொருள்கள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

அரியாலை பூம்புகார் அகதிகள் முகாமில் தங்கியிருக்கும் இடம்பெயர்ந்த தீவகமக்களுக்கு பூம்புகார் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் வழங்கும்உலருணவுப்பொருள்கள்பழுதடைந்தவையாக இரு

யிரக்கணக்கில் முண்டியடித்துக் கொண்டே முன்வந்தனர். அது குறித்து அரசாங்கமும் இராணுவமும் பெருமை பேசிக்கொண்டனர். ஆனால் போரின் விளைவுகள் மகாவம்சத்தின் முடிவு போன்று இருக்கவில்லை. 'சிங்க வீரர்களுக்கு' இது மனக் கிலேசத்தை ஏற்படுத்துவதாக மாறியுள்ளது.

ஆனால் அன்றும் 'எல்ல ளனின்' வீரம் தோற்க வில்லை. அவனின் வயோதிபமே தோற்றது. அன்றைய போர்முனைக்கு தேவையான இளமையும், துடிப்பும் இளைஞனான துட்டகைமுனுவிடம் இருந்தது. 70 வயதுடைய வயோதிபனான எல்லாளனிடம்துடிப்புஇருக்கவில்லை. ஆனால்அன்று அவன் தனது தள்ளாதவயதிலும் தனதுஇனத்தின் மானத்திற்காகப் போரிட்டான். வீரச்சாவு அடைந்தான். எல்லாளன் ஒருமுதுகெலும்பற்ற காக்கைவன்னியன் அல்ல.

வரலாறு என்ற போர்வையில் புகுத்தப்பட்ட இதிகாசத்தில்தான் துட்டகைமுனு போரில்வெற்றி பெற்றதாக உள்ளது. ஆனால் இன்று நிஜத்தில் நிலைபரமோ எதிர்மறையாக உள்ளது. சிங்கவீரர்கள் நாளாந்தம் தொடர்ந்து மடிந்தவண்ணமே இருக்கின்றனர்.

இவை யாவற்றிற்கும் சிகரம் வைத்தால் போல் இருந்தது இன்றைய துட்டகைமுனுவாக சிங்கள மக்களால் போற்றப்பட்ட லெப். ஜெனரல் டென்சில்கொப்பேகடுவ அராலித்துறையில் புலிகளால் கொல்லப்பட்டமையாகும். இதன்பின் பெரிதும் தளர்ச்சி கண்ட சிங்கவீரர்களுக்கு கற்பிட்டிக் கடலில் 'கந்துல' மூழ்கியமையும்- 'கந்துல' என்பது துட்டகைமுனுவின் பட்டத்து யானையின் பெயர் - அவர்களை மேலும் கிலேசத்திற்குள்ளாக்கியது. புனைகதையில் கிடைத்த வெற்றியும், புகழும் கண்முன்னால் அவர்களுக்கு அழிந்துபோயிற்று.

இதனால்தான் இன்று 'சிங்க வீரர்கள்' இராணுவத்தைவிட்டு ஓடுகின்றனர். இராணுவத்தில் சேர பின்னடிக்கின்றனர். பௌத்த பேரினவாதிகளும், அரசியல் வாதிகளும் அவர்களுக்கு உற்சாகமூட்ட முடியாது தத்தளிக்கின்றனர்.

இந்நிலையில் 'வீர துட்டகைமுனுக்களை' உருவாக்க விரும்பும் இந்த இராணுவ அதிகாரிக்கு எங்கே 'சிங்கவீரர்கள்' கிடைக்கப் போகின்றார்கள் அவ்வாறு 'சிங்கவீரர்கள்' கிடைப்பினும் அவர்கள் போரிட்டு வெல்ல தள்ளாடும் வயதுடைய எல்லாளர்களல்லவா தேவை. ஆனால் இன்று போரிடும் 'எல்லாளர்கள்' இளம் குருத்தினர். துடிப்பு மிக்கவர்கள் இவர்களை வென்று எவ்வாறு 'துட்டகைமுனுக்களை' உருவாக்க முடியும்? அது முடியாதது

---

## பதவி உயர்வு பரீட்சை

(யாழ்ப்பாணம்)

எழுதுனர் சேவையின்'ஏ' பிரிவிற்கு பதவி உயர்த்துவதற்கான பரீட்சை இம் மாதம் 21ஆம் திகதி நடைபெறும் என இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளதாக யாழ் அரச அதிபரின் செய்திக் குறிபபொன்று தெரிவிக்கின்றது

மேற்படி பரீட்சை யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற உள்ளதாகவும் அச் செய்திக் குறிப்பு தெரிவிக்கின்றது மேலும் தட்டெழுத்தாளர்களை ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சையும் யாழ்ப்பாணத்தில் இம்மாதம் 28ஆ திகதி நடைபெற உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது [பா]

---

### யாழ்.

துறவிகள் சார்பில் உரைகள் இடம் பெறும்

தொடர்ந்து தென் இந்திய திருச்சபை பேராயர் அதிவண டி.ஜே அம்பலவாணர், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளின் ஆசியுரைகள்

பொது நிலையினர் சார்பில் ஜே.ஜி. இராசேந்திரனின் வரவேற்புரை என்பன இடம் பெறும்

இறுதியாக புதிய ஆயர் கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அருளுரை வழங்குவார் (21)

---

### அமெரிக்க

வேட்பாளர்களுக்கு வாக்களிப்பார்கள் மாநிலத்தில் அமோக வெற்றியீட்டா விட்டாலும் வெற்றிபெற்ற ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு மாநிலத்தில் தேர்தல் மன்ற வாக்குகள் அனைத்தும் அளிக்கப் படும.

தேர்தல் மன்றம் அடுத்த மாதம் 2ஆம் திகதி கூடுகிறது. வாக்கெடுப்பில் அமோக வெற்றியீட்டிய கிளிங்டன் 270 அறுதிப் பெரும்பான்மை தேர்தல் மன்ற வாக்குகளை இலகுவாகப் பெறுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 6 ஆம் திகதி தேர்தல் மன்ற வாக்கு முடிவுகள் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும். ஜனவரி மாதம் 20 ஆம் திகதி கிளிங்டன் அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவிப் பிரமாணம்செய்து கொள்வார்.

---

## மாலுமியும், மனைவியும் எயிட்ஸ் நோயாளிகள்

(கொழும்பு)

இலங்கையில் 41 வயது நிரம்பிய மாலுமியொருவருக்கு எயிட்ஸ் இருப்பது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. கொழும்பு ஸ்ரீ ஜெயவர்த்தன புர ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இவருக்கு நோய் முற்றியுள்ளதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இவரது மனைவியும் எயிட்ஸ்நோயாளி என்பது இரத்தப் பரிசோதனை மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

இவ் இருவரும் இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட 69-வது 70-வது எயிட்ஸ் நோயாளர்களாவர்.

---

பத்துமாத காலப் பகுதியில்

## 247 கிராமசேவையாளர் மீது இலஞ்சக் குற்றச்சாட்டு

இலங்கையில் கைலஞ்சம் பெறுவதில் கிராம சேவையாளர்களே முன்னணியில் நிற்பதாகப் பொலிஸ் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனவரி முதல் ஒக்டோபர் வரையிலான காலப் பகுதியில் லஞ்சக் குற்றத்தின் பேரில் 247 கிராம சேவையாளர்கள் மீது லஞ்சத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது இவ்வருடம்மொத்தம்218 பொலிசார் லஞ்சக் குற்றச் சாட்டு வழக்குகளில்சிக்கியுள்ளனர் இவர்களை விட மேலும் 2236 பேர்லஞ்சம் வாங்கிப்பிடிபட்டுள்ளனர்இந்த எண்ணிக்கையில் 103 நிர்வாக அதிகாரிகள், 36 சுங்க அதிகாரிகள் 6டாக்டர்கள், 22 மாகாணசபை உத்தியோகத்தர்கள் 8 விலைக்கட்டுப் பாட்டு அதிகாரிகள், 125 நீதிமன்ற உத்தியோகத்தர்கள், ஆசிரியர்களும் அதிபருமாக 83பேர், 32 மது வரி பரிசோதகர்களும் ஏனையோர் 1356 பேரும் அடங்குவர்.

---

### சர்வமத

முன்னிட்டு இக்குழுவினர் கொழும்பில் உள்ள உயர் அரசியல் தலைவர்களுடன் பேச்சு வார்த்தை நடாத்தி வருகின்றனர். இக்குழுவினர் யாழ்ப்பாணம் வந்ததும் விடுதலைப் புலிகளின் தலைவர்களையும் சந்தித்து பேச்சு வார்த்தை நடத்துவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது

---

### பெருமளவில்

இராணுவத்தில் முஸ்லிம்களை பெருமளவில் இணைத்துக் கொள்வதற்கான உறுதியை அரசு தர வேண்டுமென புதிதாக அமைக்கப்பட்டுள்ள சிறிலங்கா மக்கள் காங்கிரஸ் அரசிற்குகோரிக்கைவிடுத்துள்ளது

---

## புதிய தொழில்நுட்ப பாடம்

(கொழும்பு)

எதிர்வரும் 1994, 1995 ஆம் ஆண்டுகளில் பாடசாலைகளில் விவசாயபாட விதானத்தில் புதிய தொழில்நுட்ப பாடங்கள் அறிமுகப்படுத்தப்பட உள்ளன.

விவசாய கல்வியை தரம் உயர்த்தும் நோக்கத்துடன் தேசிய கல்வி நிறுவன பணிப்பாளர் அவர்களின் ஆலோசனைப்படி இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தேசிய கல்வி நிறுவனத்தின் விவசாயப்பிரிவு தற்போது புதிய பாடவிதானத்தை தயாரிக்கும் முயற்சியில் இறங்கியுள்ளது.

உணவு தொழில் நுட்பம் தாவரவியல் ஆராய்ச்சி, நாட்டின் விலங்கினங்கள், கடல்வாழ் உயிரினங்கள், கால்நடைகள் தோட்டச் செய்கைகள் ஆகிய விடயங்கள் மேற்படி பாடவிதானத்தில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளன.

விவசாய துறை ஆசிரியர்களுக்கும் டிப்புளோமா பயிற்சி நெறிகளையும் பட்டப்படிப்பு நெறிகளையும் இந்நிறுவனம் நடாத்த தீர்மானித்துள்ளது.

---

## போட்டிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

பொது எழுதுவினைஞர்களை ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை அடுத்த வருடம் ஜனவரி மாதம் மூன்றாம் கிழமை நடைபெற உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகவலை தற்சமயம் கொழும்பு சென்றுள்ள யாழ் அரச அதிபர் யாழ். செயலகத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். (பா)

---

கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் வழங்கும்உலருணவுப்பொருள்கள்பழுதடைந்தவையாக இருக்கிறது. இவ்வாறு இடம் பெயர்ந்த தீவக மக்கள் நலன் காக்கும் கழகம் கூறுகிறது.

பால்மா வகைகளும், கௌபியும் பழுதடைந்தவை என்றும், யாழ். செயலகம் வழங்கிய பொருள்பட்டியலில் இல்லாத பொருள்கள் வழங்கப்படுவதாகவும், பட்டியலில் உள்ள பொருள்கள் வழங்கப்படுவதில்லை என்றும் இக்கழகம் குற்றம் சாட்டியிருக்கிறது.

---

## 10 தாதிகளின் நியமனங்கள் ரத்து

பயிலுனர் தாதிமார்களை மனிதாபிமானமற்ற முறையில் ராக்கிங்செய்தமைக்காக பத்து சிரேஷ்ட பயிலுனர் தாதிமார்களின் நியமனங்கள் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு, குருநாகல், காலி ஆகிய இடங்களில் தாதிமார்கள் பயிற்சிப் பாடசாலையைச் சேர்ந்த பத்து சிரேஷ்ட பயிலுனர் தாதிமார்கள் ராக்கிங் செய்தமை தொடர்பாக குற்றவாளிகளாக காணப்பட்டதனை அடுத்து இவர்களது நியமனங்களை இரத்துச் செய்ய சுகாதார அமைச்சு முடிவு செய்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## உழைப்பாளரை இழந்த பெண்களுக்கு சுயதொழில்

யாழ்.குடாநாட்டில் உழைப்பாளர்களை இழந்த பெண்களுக்குசுயதொழில்நடவடிக்கையாக புதிய திட்டமொன்றை சிறுவர் பாதுகாப்பு நிதியம் செயல்படுத்துகின்றது. இதன் மூலம் இப் பெண்கள் கணிசமான வருமானத்தை பெற்றுக்கொள்ள வாய்ப்பாக அமையும்.

குடும்ப உழைக்கும் உறுப்பினர்களை இழந்த பெண்களுக்கு துணிவகை கொடுத்து 8 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளின் ஆடைகளை தைப்பதன் மூலம் அவர்களுக்கு ஆடைக்கான தையல் பணத்தை கொடுத்து மீண்டும் சிறுவர் பாதுகாப்பு நிறுவனம் ஆடைகளை பெற்றுக்கொள்கின்றது.

இவ்விதம் பெற்ற ஆடையை அகதிகள் முகாமில் உள்ள 8 வயதுக்கு உட்பட்ட பிள்ளைகளுக்கு வழங்கப்படுகின்றது.

ஈழநாதம்

# ஐரோப்பிய சமூக நாடுகள் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடை

(வாஷிங்டன்)

உலகவர்த்தக சட்டுப்பாட்டு அமைப்பான ''காற்'' இடம் ஐரோப்பிய சமுதாயத்துக்கு எதிராகத் தடைகளை விதிக்க அமெரிக்கா அனுமதி கோரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஐரோப்பிய சமுதாயம் உற்பத்தி செய்யும் எண்ணெய்க்கு உச்ச வரம்பு விதிக்க வேண்டும் என்றுஅமெரிக்காவலியுறுத்திய தால் இரு தரப்புக்குமிடையே பேச்சுவார்த்தைகள் முறிந்தன அதன் விளைவாகவே அமெரிக்கா இந்த நடவடிக்கை எடுக்க இருக்கிறது.

அமெரிக்கா இந்த நடவடிக்கை எடுத்தால், அமெரிக்கப் பொருள்களைத் தடைசெய்யும நடவடிக்கையைப் பதிலடியாக ஐரோப்பிய சமுதாயம் மேற்கொள்ளும் என்றுஐரோப்பிய சமுதாய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இது வர்த்தகப் போராக மாறிவிடக் கூடாது என்று பிரித்தானிய வெளியுறவு அமைச்சர் டக்ளஸ் ஹேர்ட் கூறுகிறார்.

## போக்குவரத்து ஒழுங்கு

(யாழ்ப்பாணம்)

தென் பகுதி பல்கலைக்கழகங்களில் அனுமதி கிடைத்துள்ள யாழ் மாவட்ட மாணவர்களின் போக்குவரத்து ஒழுங்குகளை யாழ். அரச அதிபர் மேற்கொண்டு வருவதாக யாழ். செயலகத்திற்கு கொழும்பிலிருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

இவர்களை கப்பல் மூலம் அனுப்பிவைப்பதற்கான முயற்சிகளை அரச அதிபர் மேற்கொண்டு வருவதாகவும் அனுமதி கிடைத்தவுடன் இவர்கள் இங்கிருந்து கப்பல் மூலம் அனுப்பிவைக்கப்பட உள்ளதாகவும் தெரியவருகிறது

## பல்கலை. ஆசிரியர் யாழ். விஜயம்

(கொழும்பு)

தென்னிலங்கை பல்கலைக் கழக ஆசிரியர் குழு ஒன்று மிக விரைவில் யாழ்ப்பாணம் வரவுள்ளதாகத் தெரியவருகின்றது.

இவர்கள் பல்கலைக் கழக ஆசிரியர் சங்க சம்மேளன கூட்டத்தில் யாழ். பல்கலைக் கழக பேராசிரியர் சந்திரகாந்தன் விடுத்த அழைப்பை ஏற்றே வரவுள்ளதாகத் தெரியவருகின்றது.

## நடுவர்களுக்கான பயிற்சி வகுப்பு

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்படும் வலைப் பந்தாட்ட நடுவர்களுக்கான பயிற்சி வகுப்பு 7, 8, 9 ஆம் திகதிகளில் வேம்படி மகளிர் கல்லூரியில் முற்பகல் 7.00 மணி தொடக்கம் பிற்பகல் 5.00 மணிவரை நடைபெறவுள்ளது இப்பயிற்சி நெறிக்கு ஏற்கனவே விண்ணப்பித்தவர்


**கோழிக்குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு**

பிறிமா வெள்ளை, கறுப்பு பிறவுண் சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு

வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு
உடன் தொடர்புகொள்ளவும்,

**"மல்லிகாபதி"**
சந்தை கிழக்கு ஒழுங்கை
மானிப்பாய். (3582)


3-rd Year Rememberance of
**Mr. M. SELVARATNAM**
(Retd. Police Officer)



**சங்கானை ப.நோ.கூ.சங்கம்(வரைவுள்ளது)**
**உட்துறை கணக்காய்வாளர் பதவி வெற்றிடம்**


20-10-92இல் மேற்படி விளம்பரத்தில் வயதெல்லை; 21 — 40 வரை.

கூட்டுறவுச் சங்கத்தில் ''வேலை செய்நோருக்கு வயதெல்லை கணிக்கப்பட மாட்டாதென்பதை ''வேலை செய்வோருக்கு'' வயதெல்லை கணிக்கப்படமாட்டாதெனக் கொள்ளவும்.

-தலைவர்

## தொடரும் நான்காம் ஆண்டு

**(4-ம்) நினைவலைகள்**



அமரர்

**சரவணமுத்து செல்வராசா**

[மாமா]

(தென்மராட்சி பிரபல வர்த்தகரும்
சாவகச்சேரி வர்த்தக சங்க முன்னாள் செயலாளரும்)

| | |
|---|---|
| மொட்டென | பொட்டென |
| 25-11-1951 | 5-11-1988 |

[திதி 22-10 1992]

பாரதப் படைகளின் பாதம் நக்கிய
பாதகக் குழுவின் வெடியினில் சரிந்து
பூரதமேறிய புண்ணியனே உன்
புலியணிபாயுது எதிரணிகுலையுது
வீரரின் துணையாய் விலங்கினை உடைக்க
வீணரின் பகையாய் நிமிர்ந்தனை ஐயா

## உள்வந்த வெளிச் சென்ற வாகன இலக்கங்கள்

**04. 11. 1992**

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 6474

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கம்-:
26-3582, 22-6468, 24-6690, 24-7078, 24-6033, 28-1992, 40-2394, 42-6452, 28-5887, 26-3130.

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கம்;-
41-8292, 24-5676, 27-248, 24-2680, 41-560, 24-3364, 26-2391, 43-1019, 42-2397, 22-8835, 22-5886, 26-5178, 22-6691, 24-1040, 42-1059, 27-9105, 41-4121, 26-1741, 42-7312, 24-6811, 40-7207, 42-9326, 24-9938.

## மரண அறிவித்தல்கள்

### காசிப்பிள்ளை சண்முகநாதன்

கொழும்புத்துறையை பிறப்பிடமாகக் கொண்டவரும் மானிப்பாயை வசிப்பிடமாகக் கொண்டவரும் காலஞ்சென்ற காசிப்பிள்ளை தங்கக்குட்டி தம்பதிகளின் அருமைப்புதல்வர் ஆகிய சண்முகநாதன் 06-10-1992 இல் கிளாலியில் அகால மரணமானார். இவர் புஸ்பராணியின் அன்புக்கணவரும் விஜேந்திரன் (மானிப்பாய் இந்துக் கல்லூரி) கஜேந்திரன் (மானிப்பாய் இந்துக் கல்லூரி), ஜெசிந்திரன் (மானிப்பாய் இந்துக்கல்லூரி) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் ஆவார். இவரின் ஈமக்கிரியைகள் நடைபெற்றன,

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

இல, 38
சங்கரப்பிள்ளை வீதி,
மானிப்பாய்.

தகவல்:
க. மரியதாசன்

(3577)

### சுந்தரம் தவராசா [றைவர்]

சரவணை சின்னமடுவைப் பிறப்பிடமாகவும் அரியாலை சம்சன் வீடமைப்புத் திட்டத்தில் வசித்தவருமாகிய சுந்தரம் தவராசா நேற்று (4-11-92) அகால மரணமானார். இவர் சுந்தரம் சந்தனம் தம்பதியரின் அருமை மகனும், நந்தினியின் அன்புக் கணவரும், தேமராசா, மேரி மாக்கிறட், பிறேமாவதி என்பவரின் சகோதரனும் பாலசிங்கம், சந்திரன், ஆரோக்கியம் ஆகியோரின் மைத்துனரும், அனலைதீவைச் சேர்ந்த S.N இமானுவேல், எலிசபேத் ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார் அன்னாரின்பூதவுடல்நல்லடக்கத்திற்காகஇன்று[5-11-92] மாலை3-00 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து மணியம் தோட்ட சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

சரவணை
திருவள்ளுவர் சனசமூக நிலையம்
வேலணை.

தகவல்-
சுந்தரம்
(3583)

Born 16. 9. 1921 | Died 5. 11. 1989


Dear Appah,
You are alway here
In each of our hearts
Where you belong

Sangarapillai Road, Manipay South (3571)

Wife, Children in-Lows, Grand Children and Loved Ones

## 31-ம் நாள் நினைவஞ்சலி

வீரஜனனம்
04-06-1969



வீரச்சாவு
06-10-1992

01 - 10 - 92 அன்று கட்டைக்காட்டு மினிமுகாம் தாக்குதலின்போது விழுப்புண்ணடைந்து 6-10-92 அன்று வீரச்சாவடைந்த யாழ் மாவட்ட விசேட வேவுப்பிரிவுப்பொறுப்பாளர்

**மேஜர் கார்வண்ணன் (பீற்றர்)**

சிவஞானசுந்தரம் சிவசோதி [சிவம்)

சீறும் சிங்களத்தின் தளபதிகள் - உடல்
வேறாகிச் சாயவைத்தாய் - கண்ணிவெடி!
வீரனே! உன் அடிச்சுவட்டில் விருப்புடனே
செல்கின்றோம் விடுதலை வென்றெடுக்க!

சுருக்கள் மாவடி,
மிருசுவில்,
(சி-5359)
— குடும்பத்தினர்

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 05ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

...ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள் மட்டும் கலந்து கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## பெற்றுக் கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

கிளாலிப் பகுதியில் தவறி விடப்பட்ட பயணிகளின் பொதி ஒன்று இளஞ்சேரன் என்பவரினால் கடந்த 31-ம் திகதி கண்டெடுக்கப்பட்டு எமது காரியாலயத்தில் ஒப் படைக்கப்பட்டுள்ளது.

இப் பொதியுள் உடுப்புகள், அல்பம், மற்றும் கைக்குழந்தைக்கான பொருள்களும் அடங்கியுள்ளன இவற்றை உரியவர்கள் வந்து பெற்றுக் கொள்ளவும்

## வணிகர் சங்க அலுவலகம் திறப்பு

(பருத்தித்துறை)

புலோலி வணிகர் சங்க அலுவலகம் மந்திகையிலுள்ள மாடிக்கட்டடத்தில் புலோலி வணிகர் சங்கத் தலைவர் திரு. வி. கணேசராசா தலைமையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இவ் அலுவலகத் திறப்பு விழாவை தமிழீழ விடுதலைப் புலிகள் வடமராட்சி உதவி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. மகான் தமிழீழ தேசியக் கொடியையும் வர்த்தகர் திரு. க.வ.செல்வராஜன் வணிகர் சங்க கொடியையும் ஏற்றி ஆரம்பித்து வைத்தனர் அலுவலகத்தை வர்த்தகர்களான திரு.வீ.சண்முகநாதன் திரு.க.நாகலிங்கம் ஆகியோர் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்தனர். இவ் விழாவிலே தமிழீழ தொழிற் சங்கப் பொறுப்பாளர் திரு இமயன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றினார். பல பிரமுகர்களின் உரையையடுத்து வணிகர் சங்க செயலாளர் திரு சின்னத்துரை தெய்வேந்திரராசா நன்றியுரை வழங்கினார். (25)

விண்ணின் பகையாய் நிமிர்ந்தவனை ஐயா
பேரது வாழும் பிரியா அன்புடன்
பேரறிவாளனே ஈந்தோம் அஞ்சலி

நுணாவில் மத்தி,
சாவகச்சேரி.
(3569)
மனைவி, மக்கள்

## 6-ம் ஆண்டு நினைவஞ்சலி



முன்னாள் மூதூர் பிராந்திய தளபதி

**மேஜர் கணேஷ்**

(சித்திரவேல் சிற்றம்பலம்-கந்தளாய்)

வீரப்பிறப்பு: 18-04-1961 வீரச்சாவு; 05-11-1986

கண்ணை இமை காப்பது போல்
மண்ணை நேசித்தவன்—நீ
அந்நிய சக்திகளுக்கு—எமது
மண்ணில் என்றுமே இடமளிக்க
மாட்டோம் என்று கூறியவன்—நீ
எங்கள் குரல்வளைகள் அறுக்கப்படும்—வரை
உரிமைக்காக குரல் கொடுப்போம் என்றவன்—நீ
இவ்வாறு கூறிய நீ......
எம்மை விட்டு பிரிந்து
ஆண்டுகள் ஆறு கழிந்தாலும்
ஆறாது உன் நினைவுகள்
உன் கனவை நனவாக்கி
நிச்சயம் வெல்வோம் தமிழீழம்.

உன் பிரிவால் துயருறும்...
அப்பா, அம்மா, சகோதர சகோதரிகள், உறவினர்கள்

பேராறு,
கந்தளாய்.
(சி/5350)

## நினைவு கூருகின்றோம் ...
## 1992-11-05

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில், மூதூர்ப் பகுதியில் சிறிலங்காப் படையினர் பதுங்கியிருந்து மேற் கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

மேஜர்-கணேஸ் (சித்திரவேல் சிற்றம்பலம் - 1-ம் படிவம், பேராறு. கந்தளாய்)

1988 ஆம் ஆண்டு கிழவிக்குளம் பகுதியில், இந்தியப் படையினர் பதுங்கியிருந்து தாக்கியதில் வீரச்சாவெய்திய-

ரமணன் (கதிர்காமு நந்தீஸ்வரன்-இரணை இலுப்பைக் குளம் - வவுனியா.)

சாவகச்சேரியில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட-

சாவகச்சேரி வர்த்தக சங்கத் தலைவர்.

1989 ஆம் ஆண்டு திருக்கோயில்பகுதியில். ஈ. பி. ஆர் எல் எவ். மற்றும் தமிழ்த்தேசிய இராணுவத்தினரின் முகாம் மீதான தாக்குதலின் போது வீரச்சாவெய்திய-

கப்டன் - ஜோண்சன் (சுந்தரலிங்கம் நிசாந்தன் - சந்திவெளி, முறக்கொட்டாஞ்சேனை - மட்டக்களப்பு )

கப்டன் காதர் (வைத்தியப்பிள்ளை கீர்த்திசீலன் - கோயில் போரதீவு - மட்டக்களப்பு.)

யோகன் (வடிவேல் வேல்ராஜன் - கள்ளியந்தீவு. திருக் கோயில் - அம்பாறை.)

சங்கர் / வக்கர் (அந்தோனிப்பிள்ளை ஜெயலிங்கம்- மட்டிக்கழி - மட்டக்களப்பு.)

நேசன் (தில்லையம்பலம் ராஜு-புல்லுமலை - மட்டக் களப்பு.)

முகிலன் ( ராசமாணிக்கம் ஜீவராசா - கோட்டைக் கல்லாறு - மட்டக்களப்பு.)

அக்கரைப்பற்றுப்பகுதியில்தேசவிரோதிகளால்கொல்லப்பட்ட

ஹசன் (ஆதம்பாவா ஹசன்)

1990 ஆம் ஆண்டு கீரிமலைப் பகுதியில் சிறிலங்காப் படையினரின் தாக்குதலில் வீரச்சாவெய்திய-

செல்வம (கெங்காஜெயகாந்தன் - பொத்துவில்- 03 - அம்பாறை.)

மகேஸ்

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-5357)